செய்தி வெளியீடு எண். 214 நாள். 21.04.2017

**திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் விவசாயிகள் குறை தீர்வு கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

~~~~

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் விவசாயிகள் குறை தீர்வு கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப.. அவர்கள் தலைமையில் இன்று (21.04.2017) நடைபெற்றது.

மாவட்ட ஆட்சியர் அவர்கள் கூறியதாவது, திருவள்ளூர் மாவட்டத்தில் இதுவரை சொர்ணவாரி பருவத்தில் நெற் பயிரில் 26525 ஹெக்டெரும், சம்பா பருவத்தில் 51026 ஹெக்டெரும். நவரை பருவத்தில் 19416 ஹெக்டெரும், சொர்ணவாரி பருவத்தில் திருந்திய நெற்பயிரில் 19064 ஹெக்டெரும். சம்பா பருவத்தில் திருந்திய நெல் பயிர் 36423 ஹெக்டெரும். நவரை பருவத்தில் 12819 ஹெக்டெரும், கரும்பு நடவில் 1237 ஹெக்டெரும், கரும்பு மறுதாம்பில் 5318 ஹெக்டெரும். பயறுவகை பயிர்களில் 12741 ஹெக்டெரும், எண்ணைய்வித்துக்கள் 7227 ஹெக்டெரும் சிறு தானியங்கள் 1190 ஹெக்டெரும், பயிரிடப்பட்டுள்ளதாக தெரிவித்தார். திருவள்ளூர் மாவட்டத்தில் நடப்பு மாதம் முடிய நிகர பயிர் சாகுபடி பரப்பு 124680 ஹெக்டெர் ஆகும். இவற்றில் 5773 எக்டேர் பரப்பளவில் வறட்சியால் பாதிக்கப்பட்ட 10697 விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் ECS மூலம் வழங்கப்பட்டுள்ளது.

பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் 2016-17 ஆம் ஆண்டில் ரூ.2,72,17,453 பிரிமியத்தொகை ICICI Lombard நிறுவனத்திடம் செலுத்தப்பட்டுள்ளது. இந்த பயிர் காப்பீடு திட்டத்தில் 31367 விவசாயிகள் பதிவு செய்துள்ளனர். காப்பீடு நிறுவனம் விவசாயிகளுக்கு உரிய இழப்பீடு வழங்க மாவட்ட நிர்வாகத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இம்மாவட்டத்தில் கால்நடைகளுக்கான தீவனம் 12000 எக்டர் இலக்கிற்கு 19000 எக்டர் சாதனை அடைந்து இருப்பு உள்ளதால் தீவனப்பற்றாக்குறை இருக்க வாய்ப்புகள் குறைவு. கால்நடை தீவனமான அசோலா உற்பத்தி செய்ய கருவிகள் வாங்க முழு மான்யம் மற்றும் பயிற்சி அளிக்கப்படுகிறது, அதனை விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். விவசாயிகள் விவசாய பயன்பாட்டிற்காக ஏரிகளில் இருந்து வண்டல் மண் எடுப்பதற்கு முதற்கட்டமாக 63 ஏரிகள் அங்கீகரிக்கப்பட்டு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது, விவசாயிகள் 5 லோடு வரை வண்டல் மண் எடுத்துக் கொள்ளலாம். உதவி இயக்குநர்(கனிமவளம்) அவர்களிடம் உரிய முறையில் விண்ணப்பித்து விவசாயிகள் பயன்பெறலாம். இப்பட்டியலில் சேர்க்கப்படாத பொதுப்பணித் துறை ஏரிகள் பட்டியலில் சேர்க்கப்பட்டு பின்னர் அரசிதழ் வெளியிடப்படும். மணல் கொள்ளையை தடுக்கும் பணியில் பொதுப்பணித்துறை எடுத்த நடவடிக்கை விவரத்தினை
~~~~

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் அறிக்கையாக அளிக்குமாறு பொதுப்பணித்துறை அலுவலர்களை அறிவுறுத்தப்பட்டுள்ளது. நீர் ஆதார நிலைகளை பாதுகாக்க குடிமராமத்து திட்டத்தின் கீழ் நமது மாவட்டத்தில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்று கூறினார்.

விவசாயிகள் தரப்பில் மோவூர் கிராமத்தில் நிலமே இல்லாத விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்கப்பட்டுள்ளதை விசாரித்து நடவடிக்கை எடுக்குமாறும், சாலைகள் மேய்க்கால் புறம்போக்கு, அரசு புறம்போக்கு மற்றும் நீர் நிலை ஆக்கிரமிப்புகளை அகற்றவும், பழுதடைந்த மதகுகள் மற்றும் பாசன கால்வாய்களை குடிமராமத்து திட்டத்தின்கீழ் சீர் அமைக்கவும், தடுப்பணை கட்டவும், கால்நடைகளுக்கான பவுண்டரி அமைக்கவும், அம்பத்தூர் இளங்கோநகர் சுடுகாடு ஆக்கிரமிப்பினை அகற்றவும், கரும்பு நிலுவைத் தொகையை விரைவாக வழங்கவும், பொன்னேரி பகுதிகளில் விவசாய நிலங்களில் உள்ள இறால் மற்றும் வண்ண மீன்பண்ணைகளை அகற்றவும், அவர்களுக்கு விவசாயம் பாதிக்காத அளவில் மாற்று இடம் ஏற்பாடு செய்து தரவம், விவசாய நிலங்களை சேதப்படும் காட்டுப்பன்றிகளை ஒழிக்க நடவடிக்கை எடுக்கவும், தாமரைப்பாக்கம் கூட்ரோடு பகுதியில் திருட்டுத்தனமாக மணல் கொள்ளை நடைபெறுவதை தடுக்கவும், மேலும் பட்டா மாற்றம் செய்தல் போன்ற கோரிக்கைகளை விவசாயிகள் முன்வைத்தனர். பள்ளிப்பட்டு வெங்கடராஜகுப்பம் மயானபாதை ஆக்கிரமிப்பை அகற்றியதற்கும், சாய்ந்த மின்கம்பங்கள் சரி செய்ததற்கும், சோழவரம் ஒன்றியம் அழிஞ்சிவாக்கம் குளத்தினை சீர் அமைக்க நிதி ஒதுக்கீடு ஆணை வழங்கியதற்காகவும் விவசாயிகள் நன்றி கூறினார்கள்.

கடந்த மாதத்தில் பெறப்பட்ட விவசாயிகளுடைய கோரிக்கை மனுக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கப்பட்டது. இறுதியாக விவசாயிகளிடமிருந்து மனுக்களை மாவட்ட ஆட்சியர் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு கே.முத்து, வேளாண்மை இணை இயக்குநர் திரு முருகவேல், பொன்னேரி சார் ஆட்சியர். திரு வி.பி.தண்டபாணி, வருவாய் கோட்ட அலுவலர் திருமதி திவ்யஸ்ரீ (திருவள்ளூர்), திரு.விமல்ராஜ் (திருத்தணி), திரு.அரவிந்த் (அம்பத்தூர்), அரசு அலுவலர்கள் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்**